# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு
# இரண்டாம் ஆண்டு 01-04-2012

## திருப்பலி முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

**தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்.**

இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இயேசு எருசலேம் நகரில் வெற்றியின் அரசராகப் பவனி வந்த நிகழ்வை நாம் அனைவரும் குருத்தோலைகளை ஏந்திநின்று நினைவுகூருகின்றோம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு அகியவற்றை நமக்கு நினைவுபடுத்தும் புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீதின் மகனுக்கு ஓசான்னா முழக்ககங்களோடும், ஒலிவ கிளைகளை கைகளிலே ஏந்திய வண்ணமாய் எபிரேயர் எருசலேமிற்குள் வீரப்பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணம் தான் இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும், மீட்பின் முதல் படியாகவும் அமைகிறது. பட்டங்களையும், பதவிகளையும் எதிர்பார்த்து இயேசுவின் பின் சென்றால் அவரின் பயணத்தில் நிச்சயம் நமக்கு இடமிருக்காது. இயேசுவைப்போல நாமும் தன்னலப் போர்வையை தகர்த்தும், ஆணவத்தை அழித்தும் இயேசுவின் பின் பயணிப்போம். இயேசுவே உண்மையான அரசர். அவர் தாழ்மையும், ஏழ்மையும் நிறைந்தவர். உண்மையும், நீதியும் அவரிடம் மாத்திரமே உண்டு. கரிசனை, அன்பு, இரக்கம், ஆறுதல், ஆசீர்வாதம், நிறைவு, நிம்மதி என்பன அவர் நமக்குத் தரும் செல்வங்களாகும். எனவே நாமும் இயேசுவே உம்மையே நம்புகின்றோம், இயேசுவே எங்கள் மீட்பர், இயேசுவே ஆண்டவர் என உள்ளத்தாலும், நாவினாலும் விசுவாசத்தோடு எடுத்துரைப்போம்.அப்போது இப்புனித வாரம் நம்மை புனிதர்களாக நிச்சயம் மாற்றும் என்ற மனநிலையோடு இத்திருவழிபாட்டில் பங்கெடுப்போம்.

# இறைமக்கள் மன்றாட்டுகள்:

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**நிலைவாழ்வு தருபவராம் இறைவா,**

உம்மில் நம்பிக்கை கொண்டு, உமது திருமகனின் அரசை உலகெங்கும் நிறுவ உழைத்து வருகின்ற திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலை யினர் அனைவருக்கும் நிலைவாழ்வைப் பரிசளிக்க வேண்டுமென்று உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருநாமத்தில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாங்கள் அனைவரும் எம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் உம்மை மகிமைப்படுத்தி: இறையுறவிலும் , ஒழுக்கத்திலும் , ஞானத்திலும் , சமூக உறவிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த மக்களாக சாட்சிய வாழ்வு வாழவும், அமைதியின் தூதுவர்களாகச்,செயற்படவும், உமது பாடுகள், மரணம், உயிர்ப்பு அகியவற்றின் செய்திகளை ஏற்று புனித வாழ்வு வாழ எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உம் திருமகன் இயேசுவே, உலகின் மீட்பர் என்பதை உலகம் எல்லாம் கண்டுணரவும் விடுதலையின் பாதையில், இயேசுவின் உயிர்ப்பின் ஆற்றலை அனைவரும் அனுபவமாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வல்லமை மிகுந்தவராம் இறைவா,**

உலகெங்கும் மனித மாண்புக்கு எதிரான அநீதியான அடக்குமுறைகள் அகற்றப்படவும், எல்லா மனிதர்களும் எவ்வித பாகுபாடுமின்றி மதிக்கப்படவும், அனைவரும் முழுமையான மகிழ்ச்சியைப் பெற்றிடவும் ஆட்சியாளர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**போராட அழைப்பவராம் இறைவா,**

பணிவிடை செய்ய நாம் தயங்கலாகாது, என்பதை எடுத்துரைக்கத்தான் யேசு அன்று தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு தன்னுடைய சீடர்களுக்கு பணிவிடை செய்தார். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நண்பர்களுக்கு, நம்முடைய உறவினர்களுக்கு ஏன் நம்முடைய எதிரிகளுக்கும் கூட பணிவிடை செய்து, வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.